# உயர்கல்வி நிறுவனங்களில் தரம் மையப்படுத்திய அறைகூவல்கள் மற்றும் எதிர்கால வளர்ச்சி நிலை

**முனைவர் ஆ. ஷர்மி**
மற்றும் **முனைவர் ம. பிரேமா**
தமிழாய்வுத்துறை
புனித சிலுவை கல்லூரி, திருச்சிராப்பள்ளி

## முகவுரை

கல்வி என்பது சமூக மாற்றத்தின் மூலம் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியை முன் நடத்திச் செல்லும் ஒரு காரணியாகத் திகழ்கிறது. ஆளுமை, மதிப்பீடு மற்றும் தனித்திறன் ஆகியவை எல்லாக் காலத்திலும் கல்வியின் பின் புலமாக உருவெடுத்து மனித சமுதாயத்தை உருவாக்குகிறது. இருபதாம் நூற்றாண்டில் உயர்கல்வி சமூக கலாச்சார மாற்றத்திற்குரியதாக எண்ணி நாடு விடுதலை அடைந்தது முதல் பெருமளவு அரசு முதலீடு செய்து மாணவர் சேர்க்கையை அதிகரித்து இருக்கிறது. இம் முயற்சியினால் ஏற்பட்ட மாற்றங்களை குருகுலக் கல்வி முறைமையினை இன்று நாம் பின்பற்றும் புதியக்கல்வி முறையால் புரிந்து கொள்ள முடிகிறது.

கல்வி சமூக நிலையை மூன்று கூறுகளாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. அவையாவன:

1. கல்விச் சுதந்திரம்
2. அறிவுசார் சமூகம்
3. உலகமயமாக்கல் மூலம் ஏற்பட்ட கல்வி மாற்றங்கள்

இந்திய அளவில் சமத்துவத்தை மையப்படுத்தி அனைவருக்கும் கல்வி என்ற கொள்கையோடு கல்வியாளர்கள் தங்களின் முடிவுகளை திறம்பட செய்து மேம்படுத்த முயல்கின்றனர். உலக அரங்கில் இன்றையக் காலக் கட்டத்திற்கு தேவைப்படும் கல்வியின் நிலை அறிந்து பல மாற்றங்களை ஆட்சியாளர்கள் தங்கள் கல்விக் கொள்கையின் மூலம் அறிமுகப் படுத்துகின்றனர்.

## அனைவருக்கும் உயர்கல்வி

பண்டையக் காலம் தொட்டு குருகுலக் கல்வி முறையினை இந்தியத் திருநாடு பின்பற்றியதன் காரணமாக ஒருங்கிணைந்த கல்வி வளச்சியை மையப்படுத்தவில்லை. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 19ஆம் நூற்றாண்டில் கல்வி முறைமை முறைப்படுத்தப்பட்டு நாடு சுதந்திரம் அடைந்த வேளையில் 21ஆம் நூற்றாண்டில் பல்கலைக்கழகங்களும் 500க்கும் மேற்பட்ட கல்லூரிகளும் செயல்பட்டு மாணவர்களுக்கு உயர்கல்வி வழங்கி வருகின்றது. அதிகமான மாணவர்கள் தங்களை உயர்கல்வியில் இணைத்துக் கொண்டு படிப்பறிவு பெற்ற நிலையில் அரசுக்கு நிதிச்சுமை ஏற்பட்டது எனினும் மனிதவள மேம்பாடு என்ற கருத்தை மனதிற் கொண்டு ஆட்சியாளர்களும் செயல்பட்டனர்.

ஒருபுறம் பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும் எண்ணிக்கையில் வளர்ந்தாலும் மற்றொரு புறம் கல்வியின் நிலை போதிய வசதி வேலைவய்ப்பு இல்லாததால் தரம் குறைந்த நிலையில் உள்ளது. உலக அரங்கில் பல நாடுகள் உயர் கல்விக்கான செலவினங்களை பெற்றோர்கள் சுமக்கும் நிலையை உருவாக்கியுள்ளன. இது ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் சட்டமாகவே உருவெடுத்துள்ளது.

இந்தியாவிலும் தனியார்மயமாக்கல் கொள்கையின் காரணமாக சமூகத்தில் மிகுதியானவர்களுக்கு கல்வி எட்டாக் கனியாகவே இருக்கிறது. எனவே அரசு கல்வி உதவித்தொகை பெற மாணவர்களுக்கு நேரடியாகவோ, வங்கியின் மூலமாகவோ. வழங்கி கல்வி நிலையை மேம்படுத்தி வருகிறது. மத்தியப் பல்கலைக்கழகங்களில் குறைந்த அளவிலான கல்விக் கட்டணம் பெற்ற போதிலும் ஏனைய பிற மாநில மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களும் சுயநிதிக் கல்லூரிகளும் கல்வி கட்டணத்தை மாணவர்களை மையப்படுத்தி செயல்படுத்தவில்லை.

மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதமான நிதி உதவியை உயர்கல்வி நிறுவனங்களுக்கு வழங்கி உதவி செய்ய நினைத்தாலும் அதிகப்படியான செலவினங்களை தொடக்கக் கல்விக்கு வழங்க வேண்டிய நிலை ஏற்படுவதால் உயர் கல்விக்கான நிதி ஒதுக்கீடு குறைவாகவே இருக்கிறது.

மாணவர்கள் மேற்கொள்ளும் பட்டப்படிப்பு தரமான நிலையில் இல்லாததால் மாணவர்களுக்கு வேலை வாய்ப்புத் திறன் தொழிற்சாலையின் எதிர்பார்ப்பிற்குத் தக்கவாறு இல்லை. எனவே தனித்திறனை மையப்படுத்தியக் கல்வி தேவைப்படுகிறது.

**கல்வி நிறுவன வளர்ச்சி ஏன்? ஏதற்கு?**

கல்வி நிறுவனங்கள் புதிய முறையில் பல பாடத்திட்டங்களை உருவாக்கி மாணவர்களை மேம்படுத்த முயற்சித்த போதிலும் கற்பதற்கான ஆய்வுக் கூடங்களை முறையாக உருவாக்கப்பட்டவில்லை. இதைக்கடந்து உயர்கல்வி நிறுவனங்களில் போதிய கட்டடம், போதிய வசதி வாய்ப்பு, நிரந்தர ஆசிரியர் பணி நியமனம், ஆசிரியர் தரம், கற்பிக்கும் முறை, ஆய்வின் நிலையில் தரம், கல்வியில் பற்றில்லா மாணவர்நிலை, அதிகப்படியான மாணவர் எண்ணிக்கை, குடும்ப வருமானம் ஆகியவை இன்றும் கல்விகற்கும் மாணவர்களுக்கும் கல்விக் கூடங்களுக்கும் சவாலாகவே இருந்து வருகிறது.

தொழில் வளர்ச்சி, அறிவியல் மாற்றம் ஏற்பட்டு இருக்கும் இன்றையக் காலக் கட்டத்தில் ஆசிரியர் திறன் மேம்பாடு மற்றும் திறமையான கற்பித்தல் முறை என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. உலக நாடுகளுக்கு இடையே போட்டி மனப்பான்மையை உருவாக்கி தரமான மாணாக்கர்களை நாட்டின் சேவைக்காக உருவாக்கி தொழில் மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்தும் போக்குக் காணப்படுகின்றது.

உலக அளவில் இன்று 300க்கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்கள் மூலமாகவும் 15,600 கல்லூரிகள் மூலமாகவும் 2.5 கோடி மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் அமெரிக்கா மற்றும் சீனா நாடுகளுக்கு அடுத்தப்படியாக உருவாக்கப்படுகின்றனர். இதில் பொறியாளர்கள் எண்ணிக்கை 3.5 இலட்சம், கல்வி நிலை உயர்ந்து மாணவர் தரம் உயர்ந்தால் நாட்டின் பொருளாதாரத் தொழில் வளர்ச்சி மேம்படும்.

**தேசிய அறிவு குழுமத்தின் பரிந்துரைகள் (2006)**

1. இந்திய அரசாங்கம், மொத்த பதிவு விகிதத்தை (Gross Enrolment) 15 சதவீதம் உயர்த்தும் நோக்கில் தேசிய அளவில் 1,500 பல்கலைக்கழகங்களை உருவாக்க வேண்டும்.
2. ஐம்பது தேசிய பல்கலைக்கழங்கள் உயர்தர கல்வியை வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட வேண்டும்.
3. இத்தகைய பல்கலைக்கழகங்கள் மாணவர்களுக்கு மனித நேயம், சமூக அறிவியல், அடிப்படை அறிவியல், வணிகம் மற்றும் தொழில் துறைப் பாடங்கள், இளங்கலை மற்றும் முதுகலை அளவில் பயிற்சியளிக்கப்பட வேண்டும்
4. உயர்கல்வி பாடத்திட்டத்திற்கு உட்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்கள் தேசிய மற்றும் உலக அளவில் சிறந்தவையாக விளங்க வேண்டும்.

இந்தியாவின் இருபதாம் நூற்றாண்டு பல்கலைக்கழகங்களின் செயல்பாடுகளை விட வித்தியாசமான மற்றும் சிறந்த செயல்பாடுகளை இன்றையத் தலைமுறைக்கான பல்கலைக்கழக தலைவர்களும் உயர்க்கல்வி நிறுவனங்களும் செய்வார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. பல்கலைகழக மானியங்களின் ஆணைக்குழு பல உயர்நிலை கல்வி நிறுவனங்களின் நிலையை பல்கலைக்கழகங்களாக உயர்த்துகிறது. மற்றும் கல்லூரிகள் தங்களின் தனிப்பட்ட சிந்தனைகளால் உயர் நிலை கல்வியை திறமை மிகுந்ததாக மாற்ற அனுமதிக்கிறது.

பல்கலைக்கழகங்கள் மற்றும் நிகர்நிலை பல்கலைக்கழகங்கள் பயிற்சி வகுப்புகள் பாரம்பரிய கற்கும் நிலைகள் கற்கும் முறையில் எளிமை கூட்டாண்மை ஆகியவற்றை வளர்க்கிறது. யுககடையைவபெ, பல்கலைக்கழகங்கள், ஆகியவற்றை தன்னாட்சி

கல்வி கொள்கைகளை உருவாக்கி புதிய பாடத்திட்டங்களையும், புதிய பல கற்கும்முறைகளையும், மாணவ சேர்க்கையையும் அதிகப்படுத்தி செயல்படுகின்றன. இவை அனைத்தும் உயர்கல்வி நிறுவனங்களையும் அதன் செயல்பாடுகளையும் சிறப்புற ஆய்வு செய்து மேம்படுத்த வழிவகை செய்கின்றன.

**மாணாக்கர்களின் வேலை வாய்ப்பு**

கல்வி முறைமை என்பது வேலை வாய்ப்பை உறுதி செய்யும் ஒன்றாக இருக்க வேண்டும் இந்திய கல்வி நிலையில் குறிப்பாக உயர்கல்வி திறன் மேம்பாட்டை மையப்படுத்தியும் திறன்களை கண்டறிந்து வேலை வாய்ப்பினை உறுதிசெய்யும் முறையையும், மொழித்திறன், கற்றலின் ஆர்வம், கணினி பயன் பாட்டுத்திறன் ஆகியன இன்றைய காலகட்டத்திற்கு மிகவும் அவசியமான ஒன்றாக கருதப்படுகிறது.

கூகுல் நிறுவனத்தைச் சார்ந்த ராம்ஸ்ரீராம் என்பவர் இந்தியாவில் சரியான திறன் கொண்டவர்களை கண்டுபிடிப்பது மற்ற நாடுகளை விட மிகக்கடினமான ஒன்று என்று கூறியுள்ளார்.

இன்றைய இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பினை நல்கும் நிறுவனங்கள் அவர்களிடமிருந்து வலைத்தளம் உருவாக்கம் மற்றும் பயன்பாட்டுத்திறனை எதிர்நோக்கி இருக்கின்றன. கல்லூரி மாணவர்களைத் தேர்ந்து வேலை வாய்ப்பை உறுதி செய்தாலும் அவர்களை நிறுவனத்திற்கு ஏற்றவாறு உருவாக்க பெரும் தொகை செலவு செய்வது என்பது நிறுவனங்களின் நிதிச்சுமையாகக் கருதப்படுகிறது. உயர் கல்வியிலும், திறன் மேம்பாட்டிலும் அரசு போதிய கவனம் செலுத்தி மனித வளங்களை உருவாக்கி இருந்தாலும் இவர்களில் பெரும்பாலானோர் வேலைக்கேற்ற நிலையில் உருவாக்கப்படவில்லை.

**திறனாய்வை மேற்கொள்ளும் வெளி நிறுவனங்கள்**

மிகுதியான உயர்க்கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்பட்டு இருந்தாலும் இந்தியாவில் கல்வி நிறுவனங்களின் தரம் என்பது ஒரு கேள்விக் குறியாகவே இருந்து வருகிறது. எனினும் இந்தியாவில் IIT, IIM (இந்திய தொழில்நுட்ப நிறுவனம், இந்திய மேலாண்மை நிறுவனம்) போன்றவை தங்கள் செயல்பாடுகளில் எந்தவிதத்திலும் தங்களது நிறுவனங்களின் தரத்தினை குறைத்து மதிப்பிடப்படுவதில்லை. இந்த கல்வி நிலையங்களை ஆய்வுச் செய்ய பல புதிய நிறுவனங்களை உருவாக்கி ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீடு செய்வதன் மூலம் பல உயர்க்கல்வி நிறுவனங்கள் திறன் மேம்பாட்டிலும் வேலை வாய்ப்பிலும் மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றனர்.

**அறைகூவல்களும் எதிர்ப்பார்ப்புகளும்**

1. இந்திய மாணவர்கள் திறமையிலும் வேலை வாய்ப்பிலும் மற்ற நாடுகளிலிருந்து உருவாக்கப்படும் மாணவர்களின் நிலைக்கு ஏற்றப்படி இல்லை.
2. இந்திய உயர்கல்வி நிறுவனங்களால் உருவாக்கப்படும் மாணவர்களில் 15மூ மட்டுமே வேலைவாய்ப்பு பெற ஏற்றநிலையில் உள்ளனர். ஏனையோர் வேலைக்கேற்றத் திறமையும் நல்லெண்ணமும் இல்லாமல் இருப்பது மிகுந்த வேதனைக்குரியதாகக் கருதப்படுகிறது.
3. வேலை வாய்ப்பை உறுதிசெய்யக்கூடிய முறையான கல்வி திட்டத்தினை உருவாக்கி ஆசிரியர்கள் செயல் பட வேண்டும். கற்பித்தலில் ஆசிரியரும் கற்றலில் மாணவரும் ஆர்வம் உள்ளவராய் இருந்து தரமான கல்வி நிலையை உருவாக்க வேண்டும். இதற்கு பெற்றோரும், அரசும், ஏனைய சார்பு நிறுவனங்களும் உதவி செய்ய முன்வர வேண்டும்.
4. ஒவ்வொரு ஆண்டும் கல்வி நிலையங்கள் கல்வி பயன் பாட்டாளர் மத்தியில் ஆய்வுமேற்கொண்டு பிரச்சனைகளை கண்டறிந்து உடனுக்குடன் தீர்வுகாண வேண்டும்.

**முடிவுரை**

தரம் மற்றும் திறன் மேம்பாடு என்பது அனைத்து கல்வி நிறுவனங்களிலும் மிகுந்த முக்கியத்துவம் கொண்டதாக கருதி கல்வி நிலையங்கள் உண்மையோடு செயல்பட

வேண்டும். தர மதிப்பீட்டு நிறுவனங்கள் வருகையின் அச்சத்தில் செயல்படுதல் கூடாது. தரம் என்பது தேவையான ஒன்று என்றும் சமூக மாற்றத்திற்கும் தனி மனித வளர்ச்சிக்கும் மிகவும் அவசியம் என்பதை உணர்ந்து கல்வி நிறுவனங்கள் செயல்படுதல் வேண்டும்.

கல்வி நிலையை மேம்படுத்தும் முயற்சியில் அதன் பயன்பாட்டாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கல்வி வளர்ச்சி தேச வளர்ச்சி என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும் புதிய இந்தியாவை படைக்க முன்வர வேண்டும்.

## References


1. அலெக்ஸ்டிச், எல். ஆர். (1997). Students' Educational Orientation and Preferences for Advising from University Professors. *Journal of College Student Development*, 38: 333-343.
2. பார்நத், ஆர். (1988). Entry and Exit Performance Indicators for Higher Education: Some Policy and Research Issues. *Assessment and Evaluation in Higher Education*, 13: 16-30.
3. ஹெர்னன், பி. (2002). Quality: New Directions in the Research. *Journal of Academic Liberianship*, Vol. 28, Issue 4.
4. ஜெயராம், என். (2006). National Perspectives: India. In: Forest, James J. F. and Altbach, Philip G. (eds.). *International Handbook of Higher Education*. Springer. Dodrecht, The Netherlands.